# மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் – 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து கழக இளைஞர் அணிச் செயலாளர் எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

**இன்று : 27.09.2026**

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | மாலை 4.00 மணி | மதுராந்தகம் (வேன் பிரச்சாரம் ) |
| 2. | மாலை 5.00 மணி | அச்சிறுப்பாக்கம் (வேன் பிரச்சாரம்) |
| 3. | மாலை 6.00 மணி | ஓரத்தி (வேன் பிரச்சாரம்) |
| 4. | மாலை 7.00 மணி | கருங்குழி (வேன் பிரச்சாரம்) |
| 5. | இரவு 8.00 மணி | மாமண்டூர் (வேன் பிரச்சாரம்) |

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 18.
நாள் : 25.09.2026

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

### த.வெ.க. ஆட்சியில் தொடரும் தனியார் மயம்!

# மின் கணக்கீட்டுப் பணி தனியாரிடம் ஒப்படைப்பு!

## மின்வாரியம் முடிவு!

சென்னை, செப். 27 -

மின் கணக்கீட்டுப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள 6 மாதத்திற்கு தற்காலிகமாக தனியார் நிறுவனங்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க மின்வாரியம் முடிவு செய்துள்ளது. இதுகுறித்து, தலைமை நிதி கட்டுப்பாட்டு அலுவலகம் வெளியிட்ட சுற்றறிக்கை: மின் கணக்கீட்டாளர் பற்றாக்குறை காரணமாக, இதுவரை ஓய்வு பெற்ற பணியாளர்கள் மூலமாகவும், பணியில் உள்ள ஊழியர்களுக்கு கூடுதல் பணிச்சுமை வழங்கியும் கணக்கீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதனால் மின் கட்டண கணக்கீடு மற்றும் கட்டணம் செலுத்தும் சுழற்சியில் காலதாமதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. மின் கணக்கீட்டில் ஏற்படும் குளறுபடிகள் மற்றும் காலதாமதம் காரணமாக மின் கட்டணம் கணிசமாக அதிகரிப்பதாக பொதுமக்கள் தரப்பில் தொடர் புகார்கள் எழுந்து வருகின்றன.

இதையடுத்து வரும் அக்டோபர் முதல் 6 மாத காலத்திற்கு தகுதி வாய்ந்த தனியார் நிறுவனங்களை வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி முறையில் தேர்வு செய்து மின் கணக்கீட்டுப் பணியில் ஈடுபடுத்த தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி, தனியார் நிறுவனங்கள் மூலம் பணியில் ஈடுபடுத்தப்படும் ஊழியர்கள் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு முடித்திருக்க வேண்டும். அவர்கள் கைப்பேசி செயலி மற்றும் புளூடூத் கருவிகளைப் பயன்படுத்தி, நுகர்வோர் வீடுகள் மற்றும் நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று மின்பயன்பாட்டை துல்லியமாக அளவீடு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பகுதிகளுக்கு ஏற்ப தினசரி கணக்கீட்டு இலக்குகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு நாளைக்கு 250 இணைப்புகள், பிறமாநகராட்சிகளில் 220 இணைப்புகள், நகராட்சிகளில் 200 இணைப்புகள், பேரூராட்சிகளில் 180 இணைப்புகள், கிராமப்புறங் களில் 110 இணைப்புகள் மற்றும் மலைப்பகுதிகளில் 80 இணைப்புகள் வரை கணக்கீடு செய்ய வேண்டும்.

இதற்கிடையே, மின்வாரியத்தில் போதிய நிரந்தர ஊழியர்களை நியமிக்க வேண்டும், நீண்ட காலமாக பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இத்தகைய சூழலில், மின் கணக்கீட்டுப் பணியை மீண்டும் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் முடிவு ஊழியர்கள் மற்றும் நுகர்வோர் மத்தியில் அதிருப்தியையும் விவாதத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மின் கணக்கீட்டுப் பணியில் நிலவும் காலதாமதத்தைத் தவிர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும், காலியாக உள்ள நிரந்தர பணியிடங்களை நிரப்புவதற்குப் பதிலாக தனியார் நிறுவனங்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பது குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளது.

### மதுராந்தகத்தில் இ.பரந்தாமனை ஆதரித்து

# சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவினர் வாக்குச் சேகரிப்பு!

### மாவட்ட அமைப்பாளர் எஸ்.எச்.ரஹ்மத்துல்லா தலைமையில்!



சென்னை, செப். 27-

மதுராந்தகம் தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.எச். ரஹ்மத்துல்லா தலைமையில் வாக்குச் சேகரித்தனர்.

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட அமைப்பாளர் எஸ்.எச். ரஹமத்துல்லா தலைமையில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் வெள்ளபுத்தூர் ஊராட்சி பாகம் 43-ல் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வீடுவீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இதில் வட்டக் கழகச் செயலாளர் கோபி, ஆர். ஜெகதீசன், வெள்ளபுத்தூர் கிளை கழகச் செயலாளர்கள் ஏழுமலை, ஜான் பாஷா, சங்கீதா, லதா பிளாரன்ஸ், யமுனா, பி.ஆர்.பாலாஜி,

எம்.சுதாகர், என். சுரேஷ், எம்.வினோத் குமார், ஜி.ரகு, எஸ்.கார்த்திக், ஜெ.யோகேஸ்வரன், சாம், அர்ஜூன், வரதராஜன், அண்ணாமலை, கன்னியம்மாள், ரத்தினம் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### சத்தியமங்கலம் ஒன்றிய முன்னாள் செயலாளர்

# ஏ.கந்தசாமி மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, செப். 27 -

ஈரோடு மேற்கு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்ற தொகுதி, சத்தியமங்கலம் முன்னாள் ஒன்றிய கழக செயலாளரும், முன்னாள் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலை வருமான ஏ. கந்தசாமி அவர்கள் 25.09.2026 வெள்ளிக்கிழமை இரவு உடல்நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இவர் கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றினார்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து கழக நிர்வாகிகள் நேரில் சென்று அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தகவல் அறிந்ததும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

### பட்டினப்பாக்கத்தில்

# புதிய தலைமைச் செயலகத்துக்கு எதிர்ப்பு!

## மேலும் ஒரு வழக்கு தாக்கல்!

சென்னை, செப். 27 –

தென் மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கறிஞர் விஜய் ஆனந்த் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு அரசு 10 லட்சம் கோடி ரூபாய் கடனில் உள்ள நிலையில், பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது கூடுதல் செலவுக்கு வழி வகுக்கும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடலோர ஒழுங்குமுறை மதிப்பீடு, சுற்றுச்சூழல் ஆய்வுகள் மேற்கொள்ளாமல் இந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும்,

பட்டினப்பாக்கத்தில் தலைமை செயலகம் கட்டுவது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைய அறிவிப்புக்கு எதிரானது என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தலைமைச் செயலகம் கட்ட திட்டமிட்டுள்ள பகுதி மீனவர்கள் அதிகமாக வாழும் இடம், அவர்களின் வாழ்விடமாக இது உள்ளதால் மீனவர்களையும் சுற்றுச்சூழலையும் கடுமையாக பாதிக்கும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டினப்பாக்கம் கடற்கரையை ஒட்டி தமிழக அரசின் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் திட்டத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அண்டவாக்கம் ஊராட்சியில் கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி செயலாளர்கள் பொறுப்பேற்று பணியாற்றும் பாகம் எண் 7 ல் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு.எம்.எல்.ஏ அவர்கள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பில் கே எஸ் ரவிச்சந்திரன், பகுதி கழக செயலாளர்கள் ஐசிஎப் வ.முரளிதரன்,எ.நாகராசன் மற்றும் 7 வது பாகப் பொறுப்பாளர்கள் பத்தன் அருள்ராஜ்,D.G.M. பெருமாள், P. தாண்டவராயன்.P. பார்த்திபன்,சத்தியராஜ் ஆகியோர் உடன் சென்று வாக்கு சேகரித்தனர்.

### சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்

# புது அரசியல்!

**( இராம அரங்கண்ணல் )**



ஜனவரி 26! இந்தியப் புது அரசியல் ஆரம்பமாகிவிட்டது. சர்க்கார் கட்டிடங்களில், பொது இடங்களில் தீபாலங்காரமும் அரசாங்கம் ஆடம்பரமும் நடை பெற்றுள்ளன. ஆனால், மக்கள் மன்றத்திலே மகிழ்ச்சி யில்லை. ‘குடியரசு’ ஆரம்பமாகிவிட்டது என்ற எண்ணங் கூட இல்லை. அது பற்றிய சிறப்புப் பேச்சுகள் கூட இல்லை.

நமது கையிலே இருந்த மாடப்புறா, பருந்தால் விரட்டப்பட்டுவிட்டது. சுதந்திர உரிமைகள் பறிபோய்விட்டன. மாகாணங்களின் உரிமைகள், வருமான இனங்கள், வளம் பெறும் வழிகள், சுதந்திர நிலை கொள்ளை போய்விட்டன.

புதிய அரசியலமைப்பை எண்ணிப் பார்க்கையில் ஆகாயமளாவி நிற்கும் கோபுரந்தான் நினைவுக்கு வருகிறது. புறா கோபுரத்தில். கீழே நாம். எனினும், நமது புறாவை நாம் பெற்றுத்தான் ஆக வேண்டும். பெறாமல் முடியாது. மாடப் புறாவைப் பெற கோபுரத்தின் மீது ஏற வேண்டும். ஏறவோ, நம்மால் இயலாது. ஏனெனில், கால்கள் இரண்டும் கட்டப்பட்டிருக்கின்றன சட்டம் என்ற கயிற்றால்! எனினும், நாம் ஏறி நமது புறாவைத் திரும்பப் பெற்றுத்தான் ஆக வேண்டும்.

‘எடுத்தடி’ வைக்க இயலாதபோது, அதற்கான வழிவகைகள் இல்லாத போது, ஏறிச்செல்லும் வாயிலும் சாத்தியிருக்கும்போது எப்படி ஏற முடியும் என்ற சஞ்சலமும் சந்தேகமும் எழும்புகின்றன. உண்மை எனினும், நாம் நமது இலட்சியத்தைப் பெற்றுத்தான் தீரவேண்டும். இதில் எந்தவித இன்னல் எதிர்நோக்கிலும், அவைகளைத் தாங்கி, தாண்டிச் செல்ல வேண்டும்.

கோபுரத்தின் படிக்கட்டுகளில் ஏறி நடக்க முடியாவிட்டால், மார்புகளால் ஊர்ந்து சென்று, நமது மாடப்புறாவை நாம் பெறுவோம் என்பதிலே திடமான நம்பிக்கையும் உறுதியும் நமது இதயத்தில் இருக்கிறது. அதே வேளையில், நமது எண்ணத்தைச் சாதிக்க, நமது இலட்சியத்தை அடைய, சட்டவிரோதம் என்ற பாதையிலே நாம் நடக்க விரும்பவில்லை. பலாத்காரம், சதி, சூதுமதி இவை நமக்குப் பிடிக்காத செயல்கள். குழப்பத்தையும், கலவரத்தையும் ஏற்படுத்தி நாட்டின் நல்வாழ்வைச் சீர்குலைத்து, இலட்சியத்தை அடைய முனைவதால் நாட்டு வாழ்வு சீர்குலையுமே தவிர, நமது எண்ணம் விரைவில் வெற்றி பெற வழியேற்படாது.

எனவே, நமது இலட்சியத்தைக் காண நாம் நடத்தும் போராட்டம் அறப்போர்சட்டவரம்பைத் தாண்டாமல் நேர்மையுடன் இருக்கும். நமது கோரிக்கைகளைக் கூறும்போது ஆளவந்தாரின் அடக்குமுறை அதிகமாகலாம். பயம் இல்லை நமக்கு. அதை ஏற்கச் சித்தமாக இருக்கிறோம். சீற்றமும், சித்திரவதையும் அதிகரிக்கலாம். அதனால் அலறி, ஆபத்துக் குழியில் விழுந்துவிடமாட்டோம்.

நேர்மை என்கிற பாதை, கடமை என்கிற விளக்கு, அமைதி என்கிற ஊன்றுகோல்கொண்டு இருட்டு மயமாக்கப்பட்டிருக்கும் நமது இலட்சியப்புரியை நோக்கி நாம் எப்போதும் போல இன்னும் வேகமாக முன்னேறியே செல்வோம். யார் தடுத்தாலும், எவர் முட்டுக்கட்டையிட்டாலும், நமது பயணத்தைத் தடுத்துவிட முடியாது.

முன்புபல ஆண்டுகளுக்கு முன்னர் வங்கத்தைத் துண்டாக்கிற்று இரண்டாக, பிரிட்டிஷ் ஆதிபத்தியம். அதுகண்டு வங்கத்தார் குமுறினர். எதிர்ப்பியக்கம் நடத்தினர். ‘அடாது இது’ என்றனர். “ஆகா.. ஒற்றுமையைக் குலைப்பதா?” என்று ஓங்காரக் குரல் எழுப்பினர். வெள்ளை ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சி என்று கூறினர். ஆர்ப்பரிப்பு, கொதிப்பு, ஆத்திரக் கூச்சல் கண்ட ஆங்கில ஆட்சி அப்போது, மார்தட்டித்தான் பேசிற்று. சட்டம் செய்துவிட்டோம், அதை மீண்டும் ரத்து செய்வதென்பது எங்கள் அகராதியில் இல்லை, இட்டது இட்டதுதான் என்று கர்வத்துடன் பதில் தந்தனர்.

ஆனால், கர்வம் நீடிக்கவில்லை. மக்கள் எதிர்ப்பு மண்டியிடச் செய்தது. சட்டத்தை மீண்டும் மாற்றும்படி செய்தது. துண்டுபோடப்பட்ட வங்கம் ஒரே வங்கமாக ஆக்கப்பட்டு, ஆகஸ்ட் 15 வரை ஒரே மாகாணமாக இருந்து, பின் பாகிஸ்தானுக்குப் பாதியும், இந்துஸ்தானுக்கு மீதியும் என்று ஆயிற்று.

சட்டம், சாசுவதமானதல்ல. அதிகாரத்திலிருப்போரால் மமதை, மண்டைக் கர்வம் காரணமாகப் பேசப்படலாம், போட்டால் போட்டதுதான் என்று! ஆனால் அந்தப் பேச்சை மக்களின் இதயக்குமுறல் மாற்றிவிடும். மக்கள் சக்தி முன் மமதையும் கர்வமும் பொடிப்பொடியாகிவிடும்.

புது அரசியல் மூலம், மாகாணங்களுடைய அதிகாரங்கள் டெல்லியிலே கொண்டுபோய்க் குவிக்கப்பட்டிருப்பது ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ளவர்களை ஆத்திரமயமாக ஆக்கியிருக்கிறது. மாகாணத்திற்குக் கிடைக்கக்கூடிய வருமான இனங்கள், மத்திய சர்க்காருக்குக் கொண்டு போகப்பட்டிருக்கின்றன. குடியரசின் தலைவராக வருபவர் நினைத்தபோது மாகாணங்களின் நிர்வாக அதிகாரத்தில் தலையிடும் அளவுக்கு மாகாணங்களின் சுதந்திரம் பறிபோயிருக்கிறது.

நேரு, பட்டேல் போன்ற முதல் வரிசைத் தலைவர்களுக்கு அடுத்தபடியாக, யார் அந்த இடத்திற்கு வந்தாலும், இவ்வளவு செல்வாக்கும் மதிப்பும் ஏற்பட முடியாது. எனவே எதிர்காலத்தில் அந்த இடத்தில் அமருபவர்கள் தங்கள் ஆட்சிப் பொறுப்பையேற்று அதிகாரம் நடத்தத் துவங்கும்போது மறைந்து கிடக்கும் மனக்குறைகள் மகத்தானதாகத் தெரிய ஆரம்பிக்கும். பிரகாசம் பேச ஆரம்பிப்பார் காரசாரமாக! காமராஜருக்கும் அந்த அளவு துணிவும் வேகமும் பிறக்கலாம். இது இன்றைய அரசியலமைப்பில், டெல்லியில் கொண்டு போய் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையும், எதிர்காலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நன்கு விளங்கும்.

எண்ணிப்பார்க்கும்போது, நமது இலட்சியத்துக்கு எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை, ஒளி விடுகிறது. கலக்கமும் கவலையும் நமக்கில்லை. கடமையும் தொண்டும் நம்மைத் தழுவிக் கிடக்கின்றன. வேதனையும் விம்மலும் விலகட்டும். வீரர்கள் படை தயாராகட்டும். வெற்றி நமதே!

(திராவிடப் பண்ணை 1951இல் வெளியிட்ட இதயகீதம் என்ற கட்டுரைத் தொகுப்பிலிருந்து..)